# தமிழர் கலைகளில் வர்மம்

120

**முனைவர் . சு. செல்வி**
**உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை**
**இலக்குமிபுரம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, நெய்யூர்.**

ஆய்வு சுருக்கம்:
பண்டையக் காலங்களில் இருந்தே ஆயக்கலைகள்அறுபத்து நான்கு என்பார்கள். அதில் ஒருகலையேஇவ்வர்மக்கலை. மனித உடம்பில் பல்வேறு நரம்பு மையங்களில் இடம் பெறுவதே வர்மம். அம்மையங்களை அறியும் திறன் வர்மானிகளுக்கு மட்டுமே உண்டு. வர்ம மருத்துவ முறையைபயிலுபவர்களைவர்மானி' என்பர். தொட்டுக் காட்ட வித்தை சுட்டுப் போட்டாலும் வராது' என்ற பழமொழிக்கு ஏற்ப ஆசானிடம் சென்று பயிற்சி பெற்றால் மட்டுமே சிறப்பான முறையில் பயன் கிடைக்கும்.
பழையனகழித்தும்புதியனபுகுதலும்
வழுவல கால வகையினானே"
என்றுஇலக்கண ஆசிரியர் வகுத்துள்ளதற்கு ஏற்றாற்போல காலங்கள் பல கடந்து சென்றாலும் பழைய முறைகளும் பழக்கவழக்கங்களும் அதிக அளவில் மக்கள் மத்தியில் புரளாமல்சென்றாலும் வர்மம் என்னும் மருந்தும்வாழையடிவாழையாக தலைமுறை தலைமுறைக்கும்அழியாமல் இன்னும் உயிரோடிருக்கிறது. என்பதில்ஐயமில்லை.
வர்மம் மனித உடம்பில் எவ்வாறு ஏற்படுகிறது என்றும் அதை எடுத்துக்கூறி மக்களிடம் நல்ல எண்ணத்தை வெளிப்படுத்தி சித்தர்களின்இம்மருத்துவமுறையைபரவச்செய்வதே
இக்கட்டுரையின் முக்கிய நோக்கமாகும்.

தமிழனும்வர்மக்கலையும்

முன்னுரை:

வர்மக்கலைஎன்பத தமிழ் மண்ணுக்கே உரிய உடலியல் மற்றும் மனவயில் கலை ஆகும். இதனை ஒரு தற்காப்பு கலையாகவும்கருதுவதுண்டு. வர்மம் என்ற சொல்லுக்கு உயிர் ஆற்றல் பற்றிய அறிவியல் என்பது பொருள். இது ஐந்தாயிரம் ஆண்டு பழமை வாய்ந்த மருத்துவ முறையாகும். லெமூரியா என்ற குமரிக்கண்டமே இதன் பிறப்பிடம். மேலும் மனித குலத்தின்நல்வாழ்வுக்காகவே தங்கள் உடல்பொருள் ஆவியஅனைத்தையும் ஒரு சேரபயன்படுத்தியவர்கள்சித்தர்கள்ஆவர்.

1 நீங்களும் வர்மக்கலைகற்கலாம் ராசா.ப.5

வள்ளுவரும்வர்மநூலும்:

வள்ளுவர் காலத்தில் கூட வர்மம் மாண்புற்றுவிளங்கியிருக்க வேண் டும். ஆதற்கானசான்றுகள்திருக்குறளிலேயே போதிய அளவு கிடைக்கின்றன. 'நூல்' என்ற சொல்லை கையாளுகின்ற பெரும்பாலான இடங்களிலெல்லாம்வள்ளுவர்வர்மத்தையும்சுட்டிக்காட்டுவதாக திருக்குறள் பாடல் விளங்குகிறது.

வர்மக்கலைகயிலுபவர் கையாள வேண்டியது:

வர்மக்கலைநமக்கும்பிறருக்கும் பல வழிகளில் நன்மை பயப்பது. இதை கெட்டவர்கள் கெட்ட வழியில் பயன்படுத்தி தீங்கு விளைவித்து விடக்கூடாது என்றக்கருத்தில் நம் முன்னோர்கள்இக்கலையைபயிற்றுவிப்பதற்கு பல நியதிகளைகடைபிடித்துச்செய்துள்ளனர்.



Bharath Institute of Higher Education And Research
பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,கலை மற்றும் அறிவியல் புலம்,தமிழ்த்துறை
பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம்
"தமிழ் இலக்கியங்களில் உலக இலக்கியச் சிந்தனைகள்"
பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் சென்னை volume:1 Issue:3 October 2022.
ISSN:2582-9599

வர்மஆசானின்பண்புகள்:

- உடலின்தன்மைப்பற்றிஅறிவும், உடலியக்கஅறிவும், உடல்நலம்பேணுவதில்உயர்அனுபவம்பெற்றவராகவும் , பிறஉயிர்களிடம்கருணைகாட்டும்பண்புஉடையவராகவும்இருக்கவேண்டும் .
- ஆணவம், பொய், பொறாமை, கோபம், சூதுவாது, கொலை, வஞ்சனைபோன்றகீழ்த்தரசெயல்கள்இருத்தல்க் கூடாது.
- மனக்கட்டுப்பாடும்பிறர்வளர்ச்சியைக்கண்டுபண்பாளராகஇருத்தல்வேண்டும் . மகிழ்ந்துஅவலைஊக்குவிக்கும்
- ஜாதி,மத,இன, நிறபேதங்களற்றஉயர்பண்போடுசீடரைதேர்வுசெய்யும்திறன்படைத்தவராகஇருக்கவேண்டும் .

உடலில் வர்மம் ஏற்ப்படும்விதங்கள்:
உடம்பில் உயிரைக் காக்கும் பகுதிகளில் குறிப்பிட்ட மாத்திரை அளவில் தாக்குதல் ஏற்ப்பட்டாலேஉடம்பில்வர்மம் ஏற்படுகிறது. ஏதிரிகளிடம் சண்டை இடுவதற்காகவும் மேலும் வீர தீர செயல்களுக்காகவும்போட்டிக்காகவும்இக்கலையைக் கருதுதல் கூடாது.அடவு, ஒடு போன்ற சொற்கள் வர்மத்தைக்குறிக்கவந்தவையே. மிக நுட்பமாக அறிய வேவண்டிய ஒரு செயல் ஆகையால் இதற்கு 'சூட்சுமம்' என்று அழைப்பர். 'கரணம் தப்பினால் மரணம் என்பது கூட இவ்வர்மத்தைசுட்டிக்காட்டுவதே ஆகும்.

2. முாற்றுமருத்துவங்கள் பகுதி -- இரா. மாணிக்கவாசகம்பக் 161.

நாடி சாஸ்திரம்:
வர்மக்கலைக்கு மிக முக்கியமாகக் பயன் தருவது நாடி சாஸ்திரம், நாடி சாஸ்திரம் தெரிந்துக்கொள்வதினால்இக்கலையை மற்றவர் க ற்கும் சிறப்பான முறையில் சொல்லிக் கொடுக்கலாம்.

'வானாகிமண்ணாகிவளியாகிஒளியாகி
ஊனாகிஉயிராகிஉண்மையுமாய்இன்மையுமாய் ---என்று

மனித உடம்பை பஞ்ச பூதங்களுகளினால் ஆனது என்று தாயுமானவர் கூறுகின்றார்.

வர்ம வகைகள்:
படுவர்மம், தொடுவர்மம்,தட்டுவர்மம், நோக்குவர்மம் என வகைப்படுகின்றது. மனித உடம்பில் பெரும்பாலும் நரம்புகள் செல்லும் பகுதியிலேயேவர்மபகுதினள் உள்ளது. சில நேரங்களில் வர்மபகுதிகள் நரம்புகள் இல்லா இடமாகவும் இருக்கும். ஆந்த இடங்களில் அடிப்பட்டால்இரத்தஓட்டத்திற்கு தடை ஏற்படுகின்றது. இதனால் இம்மருத்துவத்தை நாடி மூலம் அறிந்து அதற்குரிய மருத்துவம் செய்ய வேண்டும். குலங்கள் பல கடந்து சென்றாலும் பழைய முறைகளும் பழக்கவழக்கங்களும் அதிக அளவில் மக்கள் மத்தயில்புரளுகின்றன. வர்மம் என்பதற்கு மருந்து வாழையடிவாழையாக தலைமுறை தலைமுறைக்கும்அழியாமல் இன்னும் உயிரோடிருக்கின்றது. தமிழர்களின் மட்டுமல்லாமல் நமது பாரதத்தின்பாரம்பரிய மருத்துவ முறைகளில் ஒன்று தான் இவ்வர்ம மருத்துவம். இம்மருத்துவ முறையானது சித்தர்களாலேதமிழர்களிடத்தில்தோற்றுவிக்கப்பட்டது

3. வர்மக்கலை களஞ்சியம் முரளிதர் SN பக் 126

தேரையரும்வர்மக்கலையும்
வர்மக்கலையின் மூலம் அறுவை சிகிட்சை செய்வதில் மிகவும் சிறந்தவராக 'தேரையர்' காணப்படுகின்றார். இவரை அறுவை சிகிட்சையின்தந்தையாகபோற்றுவதை அறிய முழகின்றது. அக்காலத்தில் போரில்

அடிப்பட்டவர்களுக்கு அறுவை சிகிட்சையைவர்ம மருத்துவம் வழியாக செய்யும் சிறப்பு தன்மையும் காணப்பட்டதுபதிணெண்சித்தர்கள் வழி அருளியமருத்துவர்கள் பல்வேறு வழிகளில்மனிதனுக்குப்பயன்பட்டது.

4. பதிணெண்சித்தர்கள் நாடி சாஸ்திரம்: இரத்தின நாயகர் : ப: 110 அகத்தியர் தேரையர் மற்றும் பல்வேறு வர்மஆசான்கள்சித்தர்கள் வழியாக மருத்துவ முறைகளையும் உடம்பில் உள்ள மாற்றங்களையும் அறிந்து வாமத்திற்கு மருந்து வழங்கி வந்துள்ளார்கள்.

முடிவுரை:

தமிழர்கலைகளில் 'வர்மம்' என்பது தமிழ் மண்ணுக்கே உரிய உடலியல் மற்றும் மனவியல்கலையாகும். ஆதித் தமிழன் படைத்த அற்புதமான கலைகளில் ஒன்று வர்மக்கலைஎதிரிகளை எந்த ஆயுதமும் இல்லாமல் தாக்கக் கூடிய கலை. இக்கலையை படிக்கும் போது உயர் அனுபவம் பெற்றவராக இருக்க வேண்டும். வீர விளையாட்டுகளில்ஒருவகையாகவும்வர்மக்கலைஇருந்துள்ளது. இக்கலையைஏராளமானவர்கள் இன்று தெரியாமல் போனதற்கு காரணம் வர்மக்கலை தெரிந்த ஆசான்கள் தங்கள் குழந்தைகளுக்குக் கூட கற்றுக்கொடுக்காததே ஆகும்.

துணை நூற்பட்டியல்

1. ராசா,நீங்களும் வர்மக்கலைகற்கலாம், ஸ்ரீ சங்கீதவாணிபதிப்பகம் .18,நாராயணசுவாமி தெரு ,தாண்டவ மூர்த்தி நகர் வளசரவாக்கம்,சென்னை -87முதற்பதிப்பு: டிசம்பர் 1997

2. மாணிக்க வாசகம். இரா மாற்று மருத்துவர்கள் பகுதி - ( 1) தமிழ் பேராசிரியர் ஓய்வு, பச்சையப்பன் கல்லூரி, அன்னை அபிராமி அருள்

3. முரளிதரன்எச்.என் வர்மக்கலை களஞ்சியம் மோகன் புத்தக நிலையம், 4 வள்ளலார் தெரு, பத்மநாப நகர், சூளைமேடு, சென்னை முதற்பதிப்ப: மார்ச் 94 1997

4. இரத்தின நாயகர்,பதிணெண்சித்தர்கள் நாடி சாஸ்திரம் திருமகள் விலாசஅச்சயந்திர சாலை சென்னை,



Bharath Institute of Higher Education And Research
பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,கலை மற்றும் அறிவியல் புலம்,தமிழ்த்துறை
பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம்
"தமிழ் இலக்கியங்களில் உலக இலக்கியச் சிந்தனைகள்"
பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் சென்னை volume:1 Issue:3 October 2022.
ISSN:2582-9599